DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : வேலுச்சாமி | Father/Husband Name : மாயாண்டி |
| Age : 54 | Village : கஞ்சம்பட்டி |
| Taluk : | Calling : – |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jul 2026 15:15
(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u>** :–

1. நான் 25 ஆண்டுகளாக கஞ்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் தற்போது மானூர் தாலுகா இதற்கு முன்பு சங்கரன்கோவில் தாலுகா வெயில்கந்தபுரம் ஆகும். என்னுடைய அண்ணனின் மனைவிக்கு கஞ்சம்பட்டி ஆகும். ஆகையால் என்னுடைய அண்ணன் அவருடைய மனைவி வீட்டிற்கு வந்துவிட்டார். என்னுடைய அண்ணன் இறந்த பிறகு நான் கஞ்சம்பட்டிக்கு குடி வந்துவிட்டேன். இந்த வழக்கு எதிரிகள் கருப்பசாமி, பாலகிருஷ்ணன் மற்றும் குழந்தை சாமி ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய பக்கத்து தெருவில் குடியிருக்கிறார்கள். 2 வது எதிரி பாலகிருஷ்ணன் இறந்துவிட்டார்.

2. 27.05.2022 ம் தேதி மாலை 06.10 மணியளவில் நான் கஞ்சம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது வெளியூர்காரன் இங்கே எதற்கு இருக்கிறாய் என்று எதிரிகள் மூவரும் என்னை பார்த்து கேட்டார்கள். நான் என்னுடைய அண்ணனின் குடும்பத்திற்காக இருக்கிறேன் என்று கூறியபோது என்னை ஊரைவிட்டு ஓடுடா என்று கூறினார்கள். 1 வது எதிரி கருப்பசாமி லெப்பம் பார்க்கக்கூடிய சுமார் அரை அடி அகலம் கொண்ட தகடை வைத்து சங்கை அறுத்துவிடுவேன் என்று கூறி வந்தார். அதை நான் தட்டிவிட்டதில் என்னுடைய நாடியில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது.

3. பாலகிருஷ்ணனும் குழந்தைசாமியும் என்னுடைய கால் மற்றும் கையை பிடித்து கீழே தள்ளி மூவரும் சேர்ந்து என்னை அமுக்கிவிட்டார்கள். அப்பொழுது ஆட்டுக்கு குலை வெட்டும் கத்தியை இருசக்கர வாகனத்திலிருந்து எதிரி கருப்பசாமி எடுத்து வந்தார். நான் அவர்களிடமிருந்து தப்பித்து எழுந்து விலகிவிட்டேன். ஊரிலிருந்தால் என்னை கொலை செய்து தண்டவாளத்தில் தூக்கிப்போட்டுவிடுவோம் என்று கூறினார்கள்.

4. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். எனக்கு அங்கு தையலிட்டு சிகிச்சை அளித்தார்கள். நான் 11 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்றைய தினம் இரவு 10.00 மணிக்கு போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்துவிட்டு புகார் மனு எழுதி வாங்கினார்ள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அது என் கைப்பட எழுதப்பட்டதாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். **<u>(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>**

5. என்னிடம் காட்டப்படும் பி.ஆர்.எண்.55/2023 ல் உள்ள தகடு இந்த வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டது அல்ல . இந்த தகடு 4 இன்ச் அகலம் மட்டும் தான் இருக்கும், மேலும் அது புதிய தகடாக இருக்கிறது. என்னை தாக்க பயன்படுத்திய தகடு 6 இன்ச் அகலம் இருக்கும். அது பயன்படுத்தப்பட்டு துருப்பிடித்த தகடாக இருந்தது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

6. நான் 25 ஆண்டுகளாக கஞ்சம்பட்டியில் குடியிருந்து வருவதால் எதிரிகளை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரி கருப்பசாமி பெயிண்ட் அடிக்கும் வேலை செய்கிறார் என்றால் சரிதான். 2வது எதிரி பாலகிருஷ்ணனுக்கும் எனக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். அந்த பழக்கத்தின் அடிப்படையில் நான் அவரிடம் இருந்து செங்கல் மற்றும் மணல் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. நான் அவரிடம் செங்கல் மற்றும் மணல் வாங்கியிருந்தேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக அதை மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2வது எதிரியிடமிருந்து வாங்கி செங்கல் மற்றும் மணல் வாங்கியதற்கான பணத்தை 2வது எதிரி கேட்டதால் நான் எதிரிகள் மீது இந்த வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. எனக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் கிடையாது. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்திற்கு அருகே சுப்புலட்சுமி டீக்கடை இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறும் போது அந்த டீக்கடையில் சுமார் 20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள திண்டில் சுமார் 4 நபர்கள் இருந்திருப்பார்கள். அங்கு 20 நபர்கள் இருந்தார்கள் என்றாலும் அதை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. 1 மற்றும் 2 எதிரிகள் வேலைக்கு சென்று விட்டு வந்தபோது என்னிடம் 2வது எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை 2வது எதிரி கேட்டபோது நான் குடிபோதையில் அவர்களிடம் பிரச்சனை செய்தேன் என்றாலும், அப்பொழுது 3வது எதிரியை கீழே தள்ளிவிட்டேன் என்றாலும் சரியல்ல. கஞ்சம்பட்டி ஊருக்குள் பேருந்து வரும் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே நான் கஞ்சம்பட்டியில் குடியிருந்து வருவது தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் இல்லை. நான் கஞ்சம்பட்டியில் குடியிருக்க கூடாது என்று எதிரிகள் கூறினார்கள் என்று நான் கூறுவது தொடர்பாக அந்த ஊர் நாட்டாமை அல்லது பெரியோர்கள் யாரிடமாவது நான் கூறினேனா என்றால் நான் என்னுடைய அண்ணன் வீட்டில் குடியிருப்பதால் நான் அங்கு குடியிருக்க யாரிடமும் அனுமதி கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

9. வழக்கு சம்பவ இடத்தில் இருந்து சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபோது காவல் நிலையத்திற்கு சென்று தகவல் கூறினேனா என்றால் தகவல் கூறிவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றேன். புகார் கொடுக்க பிறகுதான் நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் என்னுடைய சட்டை முழுவதும் ரத்தமாக இருந்ததால் என்னை முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறும், மருத்துவமனைக்கு வந்து புகார் வாங்கிக் கொள்வோம் என்றும் போலீசார் கூறி என்னை அனுப்பி வைத்தார்கள்.

10. போலீசாரிடம் என்னுடைய ரத்தம் படிந்த சட்டையை கொடுத்தேனா என்றால் என்னிடம் வேறு சட்டை இல்லை என்பதால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த 10 நாட்களும் ரத்தக்கரை படிந்த சட்டையுடன் தான் இருந்தேன். நான் எழுதிக் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடைபெற்ற தேதியில் இரவு 10 மணிக்கு மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

11. என்னுடைய அண்ணன் மகன்களுக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் ஒருவருக்கு 27 வயதும் மற்றொருவருக்கு 25 வயது இருக்கும். இந்த வழக்கு பிரச்சனை நடைபெற்ற விபரம் அவர்களுக்கு தெரியும் என்றால் அவர்கள் சென்னையில் வசித்து வருவதால் இந்த விபரம் தெரியாது. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக என்னுடைய அண்ணன் மகன்கள் எதிரிகளிடம் எதுவும் கேட்டார்களா என்றால் இல்லை.

12. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கொரோனா பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. நான் எங்கும் வெளியே செல்ல வேண்டுமென்றால் இருசக்கர வாகனத்தில் செல்வேன் என்றால் அவசியப்பட்டால் செல்வேன். என்னுடைய புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் என்னை அருவாளை வைத்து வெட்டியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், அருவாளை வைத்து தான் வெட்டினார்கள், தகடை வைத்து வெட்ட வந்த போது நான் அதை தட்டி விட்டுவிட்டேன்.

13. எனக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றாலும், நான் மது குடித்துவிட்டு ஊரில் உள்ள நபர்களிடம் பிரச்சனை செய்துள்ளேன் என்றாலும், மது போதையில் கீழே விழுந்து கிடந்துள்ளேன் என்றாலும் அது பொய்யாகும். ஆனால் எனக்கு இரத்த கொதிப்பு மற்றும் சுகர் இருப்பதால் இருசக்கர வாகனத்தில் சென்றபோது மூன்று முறை கீழே விழுந்துள்ளேன், ஆகையால் நான் வாகனத்தை எடுத்துச் செல்வதை குறைத்து கொண்டேன். என்னை திருத்த வேண்டும் என்பதற்காகத்தான் எதிரிகள் சத்தம் போட்டார்கள் என்றாலும், அதனால் நான் அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் நேராக மருத்துவமனைக்கு தான் சென்றேன் என்றாலும், காவல் நிலையத்திற்கு சென்று கூறிவிட்டு மருத்துவமனைக்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

14. எனக்கு இருந்த காயம் எதிரிகள் என்னை தாக்கியதால் ஏற்படவில்லை என்றாலும், நான் இருசக்கர வாகனத்தில் சென்றபோது தடுமாறி கீழே விழுந்ததில் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரிகள் எனக்கு காயம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் கொடுத்ததாக கூறும் புகார் மனு சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

15. போலீசார் என்னை விசாரிக்க போது சம்பவ இடத்திற்கு அருகே நான்கு நபர்கள் இருந்தார்கள் என்று கூறினேனா என்றால் அவர்களை அடையாளம் தெரியும், ஆனால் பெயர் தெரியாது, சம்பவத்தின் போது நிறைய நபர்கள் கூடிவிட்டதால் நான் அந்த நபர்களை பற்றி போலீசாரிடம் கூறவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jul 2026 15:51

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P